**செ. கு. எண்:** 71 **நாள்:**16.02.2012

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை - 16.2.2012

சென்னை மாவட்டம், அரண்மனைக்கார தெருவிலுள்ள புனித அன்னை ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப்பள்ளி ஆசிரியை திருமதி ஆர்.உமாமகேஸ்வரி 9.2.2012 அன்று அதே பள்ளி மாணவனால் படுகொலை செய்யப்பட்டது அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் அகால மரணமடைந்த திருமதி உமாமகேஸ்வரி குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தத் துயரச் சம்பவத்தில் காலமான திருமதி. உமாமகேஸ்வரி குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.